மாவட்டத்திற்கு 50 சதவிகிதம் எடுத்துச் செல்லலாம் என்று இருக்கிறது. அதே போன்று கூட்டுறவு நாணயச் சங்கங்களிலேயும் நெல் போட்டால் 50 சதவிகிதம் வரை வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்ற உத்திரவை அரசாங்கம் பிறப்பிக்க யோசிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்திய உணவுக் கூட்டு நிறுவனத்திற்கும் கூட்டு நிறுவனத்திற்கும் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்த மாவட்டத்திலே விலை ஏறுமல் இருக்க கிளைச் சங்கங்களிலே கொடுக்கலாம் என்று இருக்கிறது. அவர்களும் வெளி மாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்று கோருவார்களானல் அது கவனிக்கப்படும்.

(ஆ) புதுக்கோட்டைப் பகுதியில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் திட்டத்தை விரைவுபடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திரு. பொன்னம்பலம் அவர்கள் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு உடனடி பொது முக்கியம் வாய்ந்த காரியம் ஒன்றைக் கொண்டு வருவார்கள்.

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ், திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை பகுதியில் (ஆலங்குடி, திருமயம், குளத்தூர் வட்டங்களில்) விசையேற்றங்களுக்கு (பம்புசெட்டுகளுக்கு) மின் இணைப்பு கொடுக்கும் திட்டத்தை, வீதி விளக்குத் திட்டத்தோடு இணைத்து விரைவு படுத்தி நிறைவேற்றித் தரவேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இம் மாநிலத்திலுள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள வேலைத் திட்டத்தின்படி ரூ. 12.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு 3,000 ஊர்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிப்பதும் 55,000 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதும் இதற்காக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின்படி புதுக்கோட்டை கோட்டத்தில் 1969-70 நடப்பு ஆண்டில் 84 ஊர்களுக்கும், 330 சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிக்கவும், 723 விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கோட்

டத்தில் அடங்கிய மூன்று வட்டங்களில் 1—1—1970 நிலவரப்படி, விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ள விவரம் கீழ்க்கண்டவாறாகும் :—

வட்டத்தின் பெயர்.	1—1—1970 நிலவரப்படிமின் இணைப்புக் கொடுக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை.	1969-70-ல (1—4—1969 முதல் 1—1—1970 வரையில்)
ஆலங்குடி	801	190
குளத்தூர்	1,384	261
திருமயம்	895	174
	3,080	625

முடிவுறாமலுள்ள மனுக்களின் நிலை வருமாறு :—

	மனுக்களின் எண்ணிக்கை.			
	ஆலங்குடி.	குளத்தூர்.	திருமயம்.	மொத்தம்.
1. நிறைவேற்றப்பட்டு வருபவை.	324	688	141	1,153
2. அனுமதிக்கப்பட்டவையும், மேற்கொள்ளப்பட விருப்பவையும்.	622	794	309	1,725
3. உருவாக்கப்பட்டு வரும் செயற் குறிப்புகள்.	1,147	1,267	365	2,779
	2,093	2,749	815	5,657

3. நிதிநிலைக்கு உட்பட்டும், மின்சாரம் வழங்குவதைப் பயன் படுத்திக்கொள்ள முன்வரும் உழவர்களைப் பொறுத்தும் புதுக் கோட்டை கோட்டத்தில் இயன்றவரையில் அதிக அளவு விசை யேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்க மின்சார வாரியம் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கண்ட முடிவை யொட்டி இதற்கு முன் நான் குறிப்பிட்ட இயல்பான வேலைத் திட்டத்துடன் கூட 1971, டிசம்பர் முடிவிற்குள் எல்லா ஊர்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்சார வசதியளிக்கும் அதாவது தெரு விளக்குகளுக்கும், வீட்டு மின் இணைப்புகளுக்கும் மட்டும் மின்சாரம் வழங்கும் சிறப்புத் திட்டத்தை மின்சார வாரியம் செயல்படுத்த முனைந்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இந்தச் சிறப்புத் திட்டத்துக்கு ஏறத்தாழ ரூ. 50 கோடி செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு

அளிப்பதும் இச் சிறப்புத் திட்டத்தில் அடங்குமாயின் செலவு மேற்கொண்டும் அதிகரிக்கும். நிதி வாயில்கள் குறைவாக உள்ளதாலும் போதிய அவகாசமில்லாமையாலும், சிறப்புத் திட்டத்தின் கீழ் தெருவிளக்குப் போடும் பணியுடன்கூட விசை யேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பணியையும் மேற்கொள்ள இயலாது. எல்லா ஊர்களுக்கு, சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கும் இணைப்புகள் போடப்பட்டு விட்டால் அப் பகுதியில் அமைக்கப்படும் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பது எளிதாகிவிடும். இவ்வாறு இம் மாநிலத்தில் எல்லா விசையேற்றங்களுக்கும் மின் இணைப்புக் கொடுப்பதற்கு இச் சிறப்புத் திட்டம் ஒரு முன்னோடியாக விளங்கு விளங்குவதாக எடுத்துக் கொள்ளமுடியும்.

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, மழையில் லாத காரணத்தால் வறட்சியான பகுதிகளில் தொடர்ந்து நடத்தி வருகிற விசையேற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்குச் சில இடங்களில் கம்பங்கள் நடப்பட்ட நிலையில் இருக்கின்றன. காரணம் கேட்டால் கம்பிகள் இன்னும் வரவில்லையென்று சொல்கி றார்கள். எனவே கம்பிகளை உரிய காலத்தில் கொடுத்து விரைவிலே மின் இணைப்புக் கிடைக்கச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமைகிறேன்.

(5) அறிவிப்புகள்.

(அ) பேரவையில் சில உறுப்பினர்கள் பார்வார்ட் பிளாக் கட்சி உறுப்பினர்களாகத் தனித்து இயங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பி. கே. மூக்கையாத் தேவர், செளடி. எஸ். சுந்தர பாரதி, ஏ. ஆர். பெருமாள், வி. தவமணித் தேவர், எஸ். பரமசிவம், ரா. இரத்தினத் தேவர், எஸ். அழகுத் தேவர் ஆகியோர் தமிழகச் சட்டப் பேரவையில் திரு. மூக்கையாத் தேவர் அவர்களது தலைமையில் ஃபார்வார்ட் பிளாக் உறுப்பினர்களாகத் தனித்து இயங்கப் போவதாக எனக்குக் கடிதம் வந்திருக்கிறது. இக்கடி தத்தில் திரு. மூக்கையாத் தேவர் அவர்களது கையெழுத்து இல்லை. ஆதலால், அவருக்கு இதுகுறித்துக் கடிதம் எழுதியுள்ளேன். அவ ரிடமிருந்து பதில் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பேரவையில் சில உறுப்பினர்கள் திரு. பூவராகன் தலைமையில் தனிக் கட்சியாக இயங்கத் தனி இடம் ஒதுக்குதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ரா. கனகசபை, கோ. பூவராகன், பி. வெங்கிடாசலத் தேவர், அ. சேனாபதிக் கவுண்டர், டி. தீர்த்தகிரி கவுண்டர், என். தீர்த்தகிரி ஆகியோர் திரு. கோ. பூவராகன் அவர்களது தலைமை யில் தனிக் கட்சியாகச் சட்டப் பேரவையில் இயங்குவார்